இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 11-08-2025

# பள்ளிக் கல்விக் கொள்கை

**“ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால் அனைவருக்கும் கல்வி, அனைவர்க்கும் உயர் கல்வி”** என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதுதான் பள்ளிக் கல்விக் கொள்கையின் உன்னதமான நோக்கம் ஆகும்.

தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை -2025 என்பதில் பள்ளிக் கல்விக் கொள்கையை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். கல்வியை ஒருசிலருக்கானதாக மாற்ற முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாசிச தேசியக் கொள்கைக்கு மாற்றாக சமூகநீதி - சமநீதி - தமிழ்ப் பண்பாட்டை உள்ளடக்கிய கல்விக் கொள்கையாக பள்ளிக் கல்விக் கொள்கை அமைந்துள்ளது. சமஸ்கிருதப் பண்பாட்டை உருவாக்குவதாக தேசியக் கல்விக் கொள்கை இருக்க, தமிழ்ப் பண்பாட்டு அடித்தளத்தில் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் கல்விக் கொள்கை அமைந்துள்ளது.

**சமஸ்கிருதத்தை புகுத்துவது, இந்தியைத் திணிப்பது, பள்ளிகளுக்குள் வந்தவர்களை 3, 5, 8, 10, 11, 12 ஆகிய வரிசையாகப் பொதுத்தேர்வுகளை வைத்து வடிகட்டி வெளியில் அனுப்புவது, ‘எனக்கு படிப்பு வரவில்லை’ என்ற சூழலை உருவாக்குவது, பாரம்பர்யக் கல்வி என்ற பெயரால் மாணவர்களை பகுத்தறிவற்றவர்களாக மாற்றுவது, குலக்கல்வியை குருகுலக் கல்வியாகப் புகுத்துவது என தேசியக் கல்விக் கொள்கையில் எத்தனையோ படுகுழிகள் வெட்டப்பட்டுள்ளன. அதனால்தான் தமிழ்நாடு அரசு, தேசியக் கல்விக் கொள்கையைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறது.**

மாற்றாக மாநிலக் கல்விக் கொள்கையை வகுக்க நிபுணர் குழுவையும் அமைத்தது. அதில் பள்ளிக் கல்விக்கான கொள்கை அறிக்கை மட்டுமே இப்போது வெளியாகி உள்ளது.

தமிழ்நாட்டின் தனித்துவமான பண்பாடு, மொழி, சமூகமரபு ஆகியவற்றை உள்ளடக்கி முற்போக்குத் தன்மையுடன் இது தயாரிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் குழந்தைகளுக்கான பார்வையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்களுக்குள் பலதரப்பட்டவர்கள் வருகிறார்கள். அவர்களது ஏற்றத்தாழ்வுகளை பூர்த்தி செய்வதாகவும் அமைந்துள்ளது. கற்பித்தல் மட்டுமல்ல, கற்பிக்கத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்குகிறது. உள்கட்டமைப்பு வசதிகள், விடுதிகள், உதவித் தொகைகள் ஆகியவை வழங்கப்படுகிறது.

மூன்றாம் வகுப்பு முடிவதற்குள் ஒவ்வொரு குழந்தையும் வாசித்தல், கணிதத் திறனை அடைவது உறுதி செய்யப்படும். மனப்பாடம் செய்வதைக் குறைத்து புரிந்து கற்றலை உருவாக்க நினைக்கிறார்கள். மாணவர்களை வினாக்கள் கேட்கவும், கண்டறியவும், புதுமையாக சிந்திக்கவும் ஊக்குவிப்பதோடு, பாடங்கள் தமிழ்நாட்டின் வளமாக இலக்கிய மரபு, சமூக இயக்கங்கள் மற்றும் சுற்றுச் சூழல்தொடர் முன்னேற்றப் பார்வை ஆகியவற்றை பாராட்டும் வகையில் அமையவுள்ளன. இந்த உள்ளூர் அறிவு மற்றும் உலகளாவிய நிகழ்விற்கு உட்படுத்துதல், குழந்தைகள் உலகினையும் அதில் தங்களின் தனித்துவமாக நிலையையும் ஆழமான மனித , விழுமிய மற்றும் உள்ளடக்கங்களின் பார்வையுடன் புரிந்துகொள்ள அவர்களை நிலை நிறுத்துகிறது.

பள்ளிக்கல்வி செயல்பாடுகளில் ரோபோடிக்ஸ், தரவு அறிவு மற்றும் நிதித் திட்டமிடுதல் ஆகியவற்றை இணைக்க இருக்கிறார்கள். புதிய தொழில்நுட்பத்தினை வகுப்பறைக்குள் கொண்டு செல்கிறார்கள். 11 வயதுடைய சிறு குழந்தைகள் இயந்திர மனிதனை வடிவமைத்தல், குறியீடுகளை எழுதுதல், செயற்கை நுண்ணறிவு எவ்வாறு வடிவமைக்கிறது என்பதை புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும். ஸ்மார்ட் ஆய்வகங்கள், பயிற்சி பெற்ற வழிகாட்டிகள் மற்றும் மின்னிய கருவிப் பெட்டகங்களின் உதவியுடன் அரசுப் பள்ளகளை மின்னிய புத்தாக்கம் மற்றும் பொருளாதார அதிகாரம் பெறுதல் ஆகியவற்றை அடையும் உந்து சக்தியாக TN -SPARK அமைகிறது.

கலைவிழாக்கள், கலை, இசை, நாடகம் மற்றும் நடனம் ஆகியவற்றில் மாணவர்களின் திறமையை வெளிக்காட்டுவதாக கலை விழாக்கள் பள்ளிக் கல்வியோடு இணைக்கப்பட இருக்கின்றன. உடற்கல்வி என்பது ஒருமணிநேர வகுப்பாக இல்லாமல், கல்வியோடு இணைந்ததாக அமையும்.

மாணவர்களை தன்னம்பிக்கை உள்ளவர்களாக மாற்ற உறுதி செய்கிறது இந்தக் கல்விக் கொள்கை. தமிழ்ப் பெருமைகள் கற்பிக்கப்பட இருக்கின்றன. தமிழும் ஆங்கிலமும் என்ற இரு மொழிக் கொள்கையை உறுதி செய்துள்ளது அரசு.

**எவர் ஒருவரும் கல்விச் சாலைக்குள் புறக்கணிக்கப்படக் கூடாது என்பது இக்கல்விக் கொள்கையின் நோக்கமாக இருக்கிறது. அனைவருக்குமான வகுப்பறைகள், அனைவரும் பங்கேற்கும் வகுப்புகள் இதன் நோக்கமாக உள்ளன. ஒவ்வொரு மாணவனையும் கவனிப்பது, ஒவ்வொரு தேவையையும் ஆதரிப்பது, ஒவ்வொரு குரலையும் மதிப்பது என்பதே இந்தக் கல்விக் கொள்கையின் மைய நோக்கம். இது சமத்துவம் சார்ந்த, உள்ளடக்கிய பள்ளிக் கல்விக்கான தமிழகத்தின் முன்னோடியான முயற்சியாக அமைந்துள்ளது.**

பள்ளிகளை வெறும் கல்விக் கட்டிடங்களாக மட்டும் அல்லாமல், பசுமைசார்ந்த (Green), Smart வகுப்பறைகள் மற்றும் மாணவர்நட்பு சூழலுடன் கூடிய (Student friendly) கற்றல் வளங்களாக மாற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மழைசேகரிப்பு அமைப்புகள், மின்னணு ஆய்வகங்கள், பாதுகாப்பான கழிப்பறைகள், உடற்கல்வி வளாகங்கள் ஆகியவை ஏற்படுத்தப்பட இருக்கின்றன. இந்த உள்கட்டமைப்பு மேம்பாடுகள், மாணவர்களின் நலனையும் கற்றல் அனுபவத்தையும் முன்னிறுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

- ★ **மொழி என்று எடுத்துக் கொண்டால் இருமொழித் திறனுடன் வாழ்க்கைக்கு பயன்படும் மொழி அறிவை இக் கொள்கை உறுதி செய்கிறது.**
- ★ **பாடத் திட்டம் என்று பார்த்தால் இன்றைய வளர்ச்சிக் கல்வியான ஏஐ, காலநிலை அறிவியல் முதல் வாழ்க்கைக்குத் தேவையான தனித்திறமைகள் வரை அனைத்தையும் உறுதி செய்கிறது.**
- ★ **தேர்வு முறையானது மனப்பாடக் கல்வியைத் தாண்டிய திறன் மேம்பாட்டுக் கணிப்பாக அமைந்துள்ளது.**
- ★ **மொத்தத்தில் அனைவருக்குமான சமத்துவக் கல்வியாக இது இருக்கிறது.**

பள்ளிக் கல்விக்காக ஆண்டுதோறும் ஒதுக்கும் தொகை ரூ.45 ஆயிரம் கோடியைத் தாண்டி உள்ளது. இது இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத நிதி ஒதுக்கீடு ஆகும். உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக பேராசிரியர் அன்பழகன் பெயரால் வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டு ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் வகுப்பறைகள், கழிவறைகள், சுற்றுச்சுவர், குடிநீர், மின்சாரம் ஆகிய தேவைகள் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டு வருகிறது. மின்னனு வகுப்பறைகள், அறிவியல் மற்றும் கணினி ஆய்வகங்கள் பல்நோக்கு அரங்குகள், விளையாட்டு மைதானங்கள், நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இதனை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொடர்ந்து கண்காணித்து வருகிறார். 234 தொகுதிக்கும் போய் பார்த்து வருகிறார். ‘திராவிட மாடல்’ ஆட்சியின் உண்மையான நோக்கம் இதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

இதனை இன்னும் மேம்படுத்தவே பள்ளிக் கல்விக் கொள்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வடித்தெடுத்து வழங்கி இருக்கிறார்கள்.

**மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் கிடைப்பதைப் போல, திராவிட மாடல் ஆட்சியானது மக்களுக்கு தினந்தோறும் நன்மைகளைச் செய்து வருகிறது. இன்றைய தலைமுறைக்கு மட்டுமல்ல, எதிர் காலத் தலைமுறைக்கும் சேர்த்து மாண்புமிகு முதலமைச்சர் வழங்கி உள்ள மாபெரும் கொடைதான் இந்தக் கல்விக் கொள்கை.**

●●



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.8.2025) முகாம் அலுவலகத்தில் கழக இலக்கிய அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் அ.அன்வர்ராஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

# மீனவர்கள் - படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, ஆக.11–**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு வலுவான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள், நேற்று முன்தினம் (09.08.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களை யும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (09.08.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் (9.8.2025) இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு இந்திய மீனவர்கள் அவர்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுடன் சிறை பிடிக்கப்பட்ட மற்றொரு துயரமான சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கு கடலை நம்பியே உயிர்வாழ்ந்து வரும் நிலையில் தற்போது சிறை வாசத்தின் அச்சத்திலேயே வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிட் டுள்ளார். மீனவர்கள் நீண்டகாலமாக சிறையில் வைக்கப்படுவதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு, அவர்களின் குடும்பங் களுக்கு கடுமையான மன உளைச்சலையும் நிதி நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த விஷயத்தை திறம்படக் கையாண்டு, கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட இந்திய அரசு உறுதியான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தி ஒன்றிய வெளி யுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கலைஞரின் “உடன்பிறப்பே” தொடங்கி - தலைவரின்

# “உங்களில் ஒருவன்” வரை கடைக்கோடித் தொண்டர்களுக்கும் கழகத்துக்கும் ‘முரசொலி’ என்றும் அசைக்க முடியாத பாலம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமித பதிவு!

**சென்னை, ஆக. 11–**

**“கலைஞரின் “உடன் பிறப்பே” தொடங்கி தலைவரின் “உங்களில் ஒருவன்” வரை கடைக்கோடித் தொண்டர்களுக்கும் கழகத்துக்கும் ‘முரசொலி’ என்றும் அசைக்க முடியாத பாலம்” என்று கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

‘முரசொலி’யின் 84 ஆம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு, கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கலைஞர் அவர்களின் மூத்தப்பிள்ளை கழகத்தின் கொள்கை முரசமாம் நம் முரசொலிக்கு 84ஆம் ஆண்டு பிறந்த நாள் இன்று.



கலைஞரின் ‘உடன்பிறப்பே’ தொடங்கி தலைவர் அவர்களின் ‘உங்களின் ஒருவன்’ வரை கடைக்கோடித் தொண்டர்களுக்கும் கழகத்துக்கும் ‘முரசொலி’ என்றும் அசைக்க முடியாத பாலம்.

நம் இளைஞர் அணி சார்பில் முரசொலியில் தொடங்கப்பட்ட திராவிட இயக்கக்கொள்கைகளின் வீச்சை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்த்து வருவதில் பெருமைக் கொள்கிறோம்.

காலத்துக்கேற்ப தன்னை புதுப்பித்துக் கொண்டு டிஜிட்டல் தளங்களிலும் முரசொலி முன்வரிசையில் நிற்கிறது.

கலைஞர் அவர்கள் பெயரிலான மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தில் இளம் தலைமுறையைத் தயாரிக்கும் பயிற்சிக் களமாகவும் இன்று பரிணாமம் பெற்றுள்ளது.

அரசியல் பத்திரிகை என்ற எல்லையைத் தாண்டி தமிழினத்தின் உணர்ச்சிப்பிழம்பாய்த் திகழும் நம் முரசொலியை வாழ்த்தி மகிழ்கிறேன்!

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



தஞ்சையில் தி.மு.க. மத்திய மண்டலத்திற்குட்பட்ட தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட வழக்கறிஞர்களுக்கான சட்டத் துறை சார்பில் 2026 தேர்தல் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோவன் எம்.பி. வழக்கறிஞர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும் தேர்தல் பணி குறித்து பயிற்சி அளித்தார். உடன் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல், சட்டத் துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.ரவிச்சந்திரன், சூர்யா வெற்றிக்கொண்டான், மக்களவை உறுப்பினர் ச.முரசொலி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் டி.கே.ஜி. நீலமேகம், என். அசோக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.